**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.134/2021**

15.06.2026 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.S.சீதா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

I.A.No.5/2024 மனுவில் 11.08.2025 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் வாதி சாட்சி 1 ராமசாமி த/பெ.சிலம்பண்ணன் திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் துணி வியாபாரம் செய்கிறேன். நான் பணம் வட்டிக்கு கொடுத்து வாங்கும் தொழில் உண்டா என்றால் இல்லை. என்னை S.R. என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். தண்டல்காரர் என்றும் என்னை அழைப்பார்கள் என்றால் நான் துணி தவணை முறையில் விற்பனை செய்வதால் அப்படி அழைப்பார்கள். நான் துணி வியாபரத்துடன் சேர்த்து தண்டலும் செய்கிறேன் என்றால் சரியல்ல.

நான் எவ்வளவு ரூபாய் கடன் கொடுத்தேன் என்றால் ரூ.7 லட்சம் கொடுத்தேன். அடமானத்தின் பேரில் கடன் கொடுப்பதற்கு மூலஆவணம் பார்த்தேனா என்றால் இல்லை. அந்த சொத்து மைனர் பெயரில் வாங்கிய சொத்து என்றால் அது எனக்கு தெரியாது. மைனர் சொத்தினை விற்கவோ அடமானம் வைக்கவோ வேண்டுமென்றால் நீதிமன்ற அனுமதி பெறவேண்டும் என்பதால் நான் ஏற்படுத்திய அடமானம் செல்லாது என்றால் சரியல்ல. மைனர் குறிப்பிட்ட வயதை அடைவதற்கு முன்பாகவே அவருடைய கையொப்பத்தை போட்டு அடமானம் ஏற்படுத்தியது செல்லாது என்றால் சரியல்ல.

கடன் ரூ.7 லட்சத்திற்கு மாதத்திற்கு ரூ.2 வட்டி என்றால் ஒரு வருடத்திற்கு வட்டித்தொகை எவ்வளவு ரூபாய் என்றால் எனக்கு கணக்கு உடனடியாக தெரியவில்லை. வா.சா.ஆ.1 பத்திரத்தில் அந்த கடனை 3 ஆண்டுகளுக்குள் திருப்பி செலுத்தவேண்டும் என்று வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி பிரதிவாதிகள் 3 வருடத்திற்குள் எந்ததொகையும் திருப்பி செலுத்தாமல் இருந்திருந்தால் உடனே நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்கவேண்டும் என்றால் பிரதிவாதிகள் தொகையை திருப்பி செலுத்துவதாக கூறி இழுத்தடித்து வந்தார்கள். பிரதிவாதிகள் அசலும் வட்டியும் திருப்பி செலுத்திவந்த காரணத்தால் தான் நான் உடனே வழக்கு தாக்கல்

செய்யாமல் காலம்கடந்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. கடைசியாக ஆகஸ்டு மாதம் 2021ல் பிரதிவாதிகள் எனக்கு ரூ.1 லட்சம் மட்டும் பாக்கி செலுத்தவேண்டி இருந்தது என்றும் அந்த பிரச்சனை காரணமாகத்தான் நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றும் சொன்னால் பொய். நான் அசலும் வட்டியும் போக மேற்கொண்டு ரூ.2 லட்சம் பிரதிவாதிகளிடம் கேட்டேன் என்றும் அதனால் தான் பிரச்சனை காவல் நிலையத்திற்கு சென்றது என்றும் சொன்னால் பொய். காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் புகார் கொடுத்து என்னை காவல் துறையினர் அழைத்து என்னை விசாரித்தார்கள் என்றும் அதற்கான ஆவணங்கள் காவல் துறையிடம் உள்ளது என்றும் சொன்னால் காவல் துறையினர் என்னை அழைத்து விசாரித்தார்கள், பிரதிவாதிகள் எதற்கும் ஒப்புக்கொள்ளவில்லை அதனால் நீதிமன்றத்தில் வழக்கு போட்டேன். பிரதிவாதிகள் என்னிடம் பலதவணைகளில் கடன் திருப்பி செலுத்தியதற்கு நான் கைப்பட எழுதி கொடுத்துள்ளேன் என்றும் கடன் கணக்கு நோட்டுபுத்தகமும் பிரதிவாதிகளிடம் உள்ளது என்றும் அதனை அவர்கள் தாக்கல் செய்ய இருக்கிறார்கள் என்றும் சொன்னால் நான் கைப்பட எதுவும் எழுதி கொடுக்கவில்லை.

என்னால் நேரடியாக சென்று கடன் வசூல்செய்யமுடியாத சூழ்நிலையில் என் அறிவுறுத்தல்படி 01.11.2017 முதல் பல தவணைகளில் ரெயின்போ டெய்லர் திரு.நாராயணன் அவர்கள் பிரதிவாதிகளை சந்தித்து தொகை

வசூல்செய்திருக்கிறார் என்றால் அது பொய், அப்படி நான் யாரிடமும் கடன் வசூல் செய்ய சொல்லவில்லை.

பிரதிவாதிகளுக்கு கொடுத்த கடனில் அசல்தொகை முழுவதும் நான் திரும்ப வாங்கிக்கொண்டேன் என்றும் வட்டியில் தான் ரூ.1 லட்சம் பாக்கி செலுத்தவேண்டியிருந்தது என்றும் ஆனால் நான் மேற்கொண்டு ரூ.2 லட்சம் தொகை செலுத்தவேண்டும் என்று பிரதிவாதிகளிடம் கேட்டதால் தான் பிரச்சனை ஏற்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றும் சொன்னால் பொய். எனக்கு தண்டல் விடுவது தொழில் என்றும் ஈவு இரக்கம் இல்லாமல் தொழில் செய்கிறேன் என்றும் சொன்னால் பொய். அதனால் இந்த வழக்கை தள்ளபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

ARUMUGAM MANIMOZHI

Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.06.15 16:30:37 +0530

Principal District Judge,

Villupuram.